(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை.

THIRU M. KANDASWAMY : Mr. Speaker, Sir, I rise to present the Fourth Report (Fourth Assembly) of the Committee on Subordinate Legislation for the year 1968–69.

(ஈ) டாக்டர் எச். வி. ஹாண்டே, மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : தலைவர் அவர்களே, அவையுரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்—

(i) பேரவைத் தலைவர் மீது டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் நேரடியாகக் குற்றஞ்சாட்டியது பற்றிய வழக்கு.

(ii) மாண்புமிகு அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை எழுப்பும்போது மறைந்த திரு. செ. பாலசுப்பிரமணியம் அவர்கள் தவறாகக் கூறியதாகக் குற்றஞ்சாட்டப் பட்டது குறித்த வழக்கு.

(உ) திரு. டி. மார்டின், "கடிதம்" நாளிதழ் ஆசிரியர், வெளியிடுவோர், திரு. ஏ. பாலசுப்ரமணியம் ஆகியவர் மீதான வழக்குகள் பற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கைகள்

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : தலைவரவர்களே, அவையுரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :—

(i) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்ட்டின், மாண்புமிகு பேரவைத் தலைவர் தவறான, உண்மைக்குப் புறம்பான அறிக்கையை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டியதைப் பற்றிய வழக்கு.

(ii) 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் தேதிய "கடிதம்" நாளிதழில் கண்டுள்ள சில பகுதிகள் சம்பந்தமாக அவ்விதழின் ஆசிரியர், வெளியிடுபவர் மீது கொண்டுவரப்பட்ட வழக்கு.

(iii) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம், மற்றும் சில உறுப்பினர்கள் மீதான வழக்கு.

" இன்று சட்டப் பேரவையின் முன் அளிக்கப்பட்ட மேற்படி குழுவின் அறிக்கைகள் சட்டப்பேரவையின் 191 (b) விதியின் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு குழுவின் அறிக்கைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : "அவையுரிமைக் குழுவின் மேற்சொல்லப்பட்ட அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளைச் சட்டப் பேரவையின் 191 (b) விதியின் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்ளவேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(6) அறிவிப்புகள்

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1969–70-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. ஆ. கு. சுப்பையா.
2. ,, வி. கே. கோதண்டராமன்.
3. ,, க. ர. நல்லசிவன்.